Sri V. SANKARAN : மதுரை போன்ற நகரங்களில் டாக்ஸிகளில் மீட்டர் இல்லாதபடியால் திருவிழா காலங்களிலும் திருமண காலங்களிலும் அவர்கள் நினைத்த வாடகையைக் கேட்கிறார்கள். அதைக் கொடுக்காவிட்டால் போகமுடியவில்லை. ஆகவே அந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க மீட்டர் வைப்பதற்கு அரசாங்கம் வேண்டியது செய்யுமா ?

The Hon. Sri V. RAMIAH : I will take that information from the hon. Member and find out if it is necessary to adopt the suggestion.

Palmyra tree climbers

* 197 *Q.*—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of palmyra tree climbers who are members of Palm-Gur Societies districtwise;

(*b*) whether any machine has been invented now to help the climbers to climb up the trees;

(*c*) if so, the cost and the weight of each such machine;

(*d*) the steps taken by the Government to popularise these machines among the public; and

(*e*) the name and the occupation of the inventor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] showing the number of palmyrah tree climbers who are members of Palm-Gur Co-operative Societies is placed on the table of the House.

(*b*) No, Sir.

(*c*) *to* (*e*) The questions do not arise.

Sri T. T. DANIEL : Sometimes palmyra tree climbers meet their death while climbing palmyra trees. In view of the fact that great risk is involved in this work, will the Government be pleased to make suggestions to the Central Research Department to examine the desirability of inventing some machine to avoid such risks to the climbers? I am told that one of the officers in Tirunelveli district has invented some sort of machine and that is being tested to find out its fitness? May I also know whether that is fact?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes, Sir. That is under examination.

Sri P. G. MANICKAM : மற்ற ஜில்லாக்களைப் பார்க்கிலும் கோயம்புத்தூர் ஜில்லாவில் 27,674 மாஜி கள் இறக்குபவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

---

[a] Printed as Appendix I on page 271 infra.

[23rd July 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் இப்பொழுது கொடுத்த எண்ணிக்கை இவர்களையெல்லாம் சேர்த்துத்தான். கூட்டுறவு சங்கம் வைத்து வெல்லம் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் அவர்களுக்கு வேலை கொடுக்கும் முறை.

SRI M. WILLIAM : In the Travancore-Cochin State Government have been giving grants with a view to encourage this industry. May I know, therefore, whether this Government will be pleased to pursue the same policy of giving grants so that the industry might be encouraged,

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

SRI K. P. PALANISAMI : எங்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் பனைமரம் ஏறக்கூடியவர்கள் 6 மாதம் ஏறிவிட்டு பாக்கி காலங்களில் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எங்கள் ஜில்லாவில் தாராபுரம் தவிர பாக்கி தாலூகாக்களில் தென்னை மரத்திற்கு பெர்மிஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை எங்கள் தாலூகாவிற்கும் விஸ்தரிக்க அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் செய்திருந்தோம். அதை அரசாங்கம் உடனடியாக கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

Appointment of Harijans through Employment Exchange

* 198 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Harijans in Coimbatore district that applied to the Empolyment Exchange Office, Coimbatore, in 1956–57 for appointment; and

(*b*) the number of Harijans provided with appointments?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1,007.

(*b*) 210.

SRI P. G. MANICKAM : இந்தக் கவர்ன்மெண்டாரின் உதவியால் தற்போது ஹரிஜனங்கள் வேலை தேடக்கூடிய அளவிற்காவது முன்னேறி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலை கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டுமானால், கிராம பியூன் வேலையிலிருந்து கெஜெட் பதிவு அதிகாரிகள் வரை காலியாகும் இடங்களில் 50 சத விகிதம் அவர்களுக்கு என்று கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? அதேபடி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கிற எல்லா தொழிற்சாலைகளிலும் அவர்களுக்கு பெருத்த மேஜர் பங்கு கொடுத்தால் தான் நல்லது. இதை சர்க்கார் கவனிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுடைய க்வாலிபிகேஷன்சைப் பார்த்து அவரவர்களுக்குத் தகுந்த வேலை தேடி கொடுக்கப்படுகிறது. கோயமுத்தூர் ஜில்லாவில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 28 ஸ்தானங்களுக்கு 20 பேர்கள்தான் அந்தத் தகுதியுடன் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். ஆகவே தகுதி எந்தெந்த இடத்தில் இருக்கிறதோ அந்தந்த இடங்களில் அவர்கதளுக்குச் சலுகை காட்டப்படும்.